## மருத்துவக் கல்வியில் ஓ.பி.சி. 27% ஒதுக்கீடு!

# 20,088 மருத்துவ மாணவர்களின் கனவை நிறைவேற்றிய தலைவர்!



இந்தியாவின் சமூகநீதி வரலாற்றில் மறக்க முடியாத மகத்தான நாள். மருத்துவக் கல்வியில் இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் 27 சதவீத இட ஒதுக்கீட்டை உறுதி செய்த நன்னாள்.

சமூகநீதிக் கொள்கையில் உறுதி, அசராத உழைப்பின் அடையாளம் நம் திராவிட மாடல் நாயகர் – தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தந்த வழிகாட்டலில் உச்சநீதிமன்றத்தின் மூலம் வென்று வந்த நாள்.

கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல் உரிமைகளில் எல்லோருக்கும் எல்லாம் என சமூகநீதிக்கான வரலாற்றை தொடங்கி வைத்தனர் நீதிக்கட்சி முன்னோடிகள். அந்த உரிமைப் போராட்டம், சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என படிப்படியாக அரசியல் வளர்ச்சி கண்ட பின்னர்தான், ஒடுக்கப்பட்ட தமிழ் சமுதாயம் படிப்படியாக முன்னேற்றியது.

அந்தப் போராட்டத்தை மாபெரும் மக்கள் இயக்கமாக மாற்றியவர் தந்தை பெரியார். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் சமூகநீதியை சட்ட வடிவங்களில் உறுதி செய்தனர். அணையாத அந்த திராவிடப் பெருஞ் சுடரை, கலைஞருக்குப் பின் தன் கைகளில் ஏந்தி “எல்லோருக்கும் எல்லாம்” என திராவிட மாடல் ஆட்சியில் இந்தியாவுக்கே வழிகாட்டிக் கொண்டிருக்கிறார் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

‘கல்வியே நம் தலைமுறையை மாற்றும் ஆயுதம்’ என பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் கொண்டிருந்த உறுதியோடு, நம் கழகத் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டு மாணவர் நலனில் காட்டும் அக்கறைகள் ஏராளம்.



வழக்கறிஞர் வில்சன்
மாநிலங்களவை
உறுப்பினர்

மருத்துவ உயர்கல்வியில் இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இழைக்கப்பட்டு வந்த அநீதியை அறிந்தவர், அதற்கெதிரான சட்டப் போராட்டத்துக்கு ‘நீ சென்று வென்று வா’ என்று எனக்குக் கட்டளையிட்டார்.

அந்தச் சட்டப் போராட்டத்தில், இந்தியாவுக்கே வெளிச்சம் கிடைக்கும் வகையில், அகில இந்திய மருத்துவ மாணவர் சேர்க்கையில், இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு 27% இட ஒதுக்கீட்டை உச்சநீதிமன்றம் வழி உறுதி செய்தோம்.

2019 ஆம் ஆண்டில், மாநிலங்களவை உறுப்பினராக எனக்கு மாபெரும் வாய்ப்பை அளித்தார் கழகத்தலைவர் அவர்கள். ஜனநாயகக் கடமையாற்றும் முதல் உரையிலேயே, மருத்துவப் படிப்புக்கான அனைத்திந்திய தொகுப்பு இடங்களில் ஓ.பி.சி. இட ஒதுக்கீடு கோரிக்கையை வலியுறுத்தினேன்.

எந்தக் கோரிக்கை, யார் மூலம், எங்கு ஒலிக்க வேண்டும் என்பதை அறிவார் நம் தலைவர். கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில் , அவர் காட்டிய உறுதியிலேயே நாடாளுமன்றம் வழி, உயர்நீதி மன்றம், உச்ச நீதிமன்றம் வழி போராட்டத்தை நடத்தினோம். 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் தொடங்கிய நம் போராட்டம், 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் தேதி, உச்ச நீதிமன்ற தீர்ப்பின் வழி உறுதி செய்யப்பட்டது.

”நாடு முழுவதும் உள்ள அனைத்திந்திய தொகுப்பில் உள்ள மாநில அரசுகளுக்கு உட்பட்ட அனைத்து இளநிலை, முதுநிலை, பட்டய, பல் மருத்துவப் படிப்புகளில் OBC வகுப்பினருக்கு 27 சதவித இட ஒதுக்கீடு தர ஒப்புக்கொண்டு அரசாணை வெளியிட்டது ஒன்றிய அரசு.

இதன் மூலம் 2021 முதல் 2025 வரை நான்கு கல்வியாண்டுகளில் சுமார் 20,088 பிற்படுத்தப்பட்ட, இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்வி உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது. வரலாற்றின் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய அந்த சாதனைப் போராட்டத்தை நிகழ்த்திக் காட்டியவர் நம் கழகத் தலைவர் அவர்கள். ஆட்சியில் மட்டுமல்ல; உறுதி மிக்க செயல்பாடுகளாலும் இன்று இந்தியாவுக்கே வழிகாட்டும் தலைவராக, வரலாற்றை தெற்கிலிருந்து எழுதிக் கொண்டிருக்கிறார் நம் தலைவர்.

இந்தியாவில் ஒட்டுமொத்த ஓ.பி.சி. மாணவர்களின் கல்வி உரிமையை நிலைநாட்டிய இந்த நாள், நம் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வெற்றித் திருநாளாக கொண்டாடப் பட வேண்டும். கழகத் தலைவரின் வழியில் சாதனை பயணத்தை தொடர்வோம்!

## கிராமப்புற – தொலைதூரப் பகுதிகளில்

# ஜெனரிக் மருந்துகளின் நன்மைகள் குறித்த விழிப்புணர்வு அதிகரிக்கப்படுமா?

## மக்களவையில் தே. மலையரசன் கேள்வி!



புதுடெல்லி, ஜூலை. 29-

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் எழுப்பிய கேள்விகள் பின்வருமாறு:-

பொதுமக்களிடையே குறிப்பாக கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் ஜெனரிக் மருந்துகளின் நன்மைகள் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் என்ன?

ஜெனரிக் மருந்துகளின் பயன்பாட்டை ஊக்குவிப்பதில் ஒன்றிய அரசுக்கு ஏதேனும் சவால்கள் உள்ளதா? அப்படியானால் அந்த சவால்களை சமாளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

தமிழ்நாட்டில் திறக்கப்பட்டுள்ள மொத்த ஜெனரிக் மையங்கள் எத்தனை? நடப்பு நீதி ஆண்டில் அவை அதிகரிக்க நடவடிக்கைகள் ஏதேனும் ஒன்றிய அரசு எடுத்துள்ளதா?

ஜெனரிக் மருந்துகள் முன் முயற்சியின் கீழ் உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் அதிக விலை உயர்ந்த மருந்துகளை சேர்க்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா?

அரசு வழிகள் மூலம் விற்கப்படும் ஜெனரிக் மருந்துகளின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் என்ன? என்ற கேள்விகளை எழுப்பினார்.



சென்னை வண்டலூர் தலைநகர் தமிழ்ச் சங்கம் சார்பில் மறைந்த பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களின் திருவுருவப் படத்தினை தில்லித் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் இரா.முகுந்தன் திறந்து வைத்தார். உடன் வா.மு.சே.திருவள்ளுவன், முனைவர் வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர், மண்பாண்டத் தொழிலாளர் நல வாரிய முன்னாள் தலைவர் சேம.நாராயணன், பாவலர் ம.கணபதி, பேராசிரியர் முகிலை இராசபாண்டியன் மற்றும் பலர் உள்ளனர்.



சிவகங்கைமில் மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெற்ற தனியார் வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்றவர்களுக்கு பணி நியமன ஆணையை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார். உடன் திரூமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி, திருப்புவனம் பேருராட்சி மன்றத் தலைவர் த.சேங்கைமாறன் ஆகியோர் உள்ளனர்.

## சென்னை தலைநகர் தமிழ்ச் சங்கம் சார்பில்

# பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் படத்திறப்பு!

## தமிழறிஞர்கள் பங்கேற்றனர்!

சென்னை, ஜூலை 29-

சென்னை வண்டலூர் தலைநகர் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்ச் செம்மொழிப் போராளி பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் படத்திறப்பும் இரங்கலும் 27 .7 .2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் பொதுச்செயலாளர் பாவலர் ம. கணபதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் முகிலை இராசபாண்டியன் வரவேற்றுப் பேசினார்.

செம்மொழிப் போராளி பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்களின் படத்தை தில்லித் தமிழ்ச் சங்கத்தின் பொதுச்செயலாளர் இரா. முகுந்தன் திறந்து வைத்து இரங்கல் உரையில் வா.மு சேதுராமன் அவர்கள் ஒரு தமிழின போராளி என்றும் டெல்லியில் மூன்று போராட்டங்களை செம்மொழிக்காகவும், இலங்கைக்கு ஒன்றிய அரசாங்கம் நிதி உதவி தரக்கூடாது என்றும் மற்றும் திருக்குறள் தேசிய மயமாக்க வேண்டும் என்ற மூன்று போராட்டங்களையும் அவருடன் நான் இணைந்து நடத்தியுள்ளேன் மேலும் இந்த மூன்று பதிவுகளையும் செம்மொழி போர்க்களம் என்ற புத்தகத்தில் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் பதிவு செய்துள்ளதை நினைவு கூர்ந்து தனது இரங்கல் உரையை நிறைவு செய்தார்.

நிகழ்ச்சியில் பெருங்கவிக்கோவின் புதல்வர் கவிவாணர் வா.மு.சே.திருவள்ளுவன், முனைவர் வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர் அவர்களும் தமிழ்நாடு மண்பாண்ட தொழிலாளர் நல வாரிய முன்னாள் தலைவர் சேம. நாராயணன் ஆகியோர் கலந்துகொண்டார்கள். இரண்டாயிரத்தில் புது தில்லியில் செம்மொழி மாநாடு நடத்தி தமிழுக்குப் பெருமை சேர்த்த தில்லி தமிழ்ச் சங்கத்தில் மறுபடியும் திருக்குறள் மாநாடும் திருக்குறள் தேசிய நூல் என்ற கோரிக்கையை வலியுறுத்தி போராட்டமும் நடத்த வேண்டும் என்று தலைநகர் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொண்டதற்கு இணங்க தில்லியில் 2026 இல் திருக்குறள் மாநாடு நடத்த ஏற்பாடு செய்வதாக முகுந்தன் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் குமார், நக்கீரன் தமிழ் சங்கத் தலைவர் பாஸ்கர் மற்றும் கனடா விஜயராணி கவிஞர் திருவடி பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர். கவிஞர்கள் சார்பில் இரங்கல் உரையை பலர் நிகழ்த்தினர்.

## மயிலம் ஒன்றியம் அகூர் ஊராட்சியில் நடைபெற்ற

# ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம் - பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து வழங்கினார்! ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை!

மயிலம், ஜூலை 29 -

மயிலம் ஒன்றியம் அகூர் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமைமுன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் மைலம் ஊராட்சி ஒன்றியம் அகூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம்நடைபெற்றது. மைலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை தாங்கினார். ஊரக வளர்ச்சி துறை உதவி இயக்குனர் தணிகை ரெத்தனமாலா முன்னிலை வகித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் சிவகுமார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தினை தொடங்கி வைத்து பொது மக்களிடமிருந்து வரப் பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார். தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு விரைந்து தீர்வு காண வேண்டுமென அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இதையடுத்து வேளாண்மை தோட்டக்கலை துறை சார்பில் விவசாயிகளுக்கு பழக்கன்றுகளையும், வேளாண் இடுபொருட்களையும்,மயிலம் வட்டார அரசு மருத்துவமனை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தையும், ரத்த அழுத்தம், சர்க்கரை நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இல்லம் தேடி மருத்துவத் திட்டத்தின் கீழ் மருந்து மாத்திரை பெட்டகம் அடங்கிய தொகுப்பினை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்.

முகாமில் அகூர், இளமங்கலம், நடுவனந்தல், காட்டுச் சிவிறி, பாம்பூண்டி ஆகிய கிராமங்களில் இருந்து ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு குடும்ப அட்டை, பட்டா மாற்றம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்டவைகள்கேட்டு 1145 கோரிக்கை மனு வழங்கினர்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன் டாக்டர் சேகர், மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர்மணிமாறன், ஒன்றிய கவுன்சிலர்கள் பரிதா சம்சுதீன், கீதாகீதா. கோமதி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் சம்பத், செந்தில், வடிவேல், ரேவதி பொன்னுசாமி உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் பொதுமக்கள் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வட்டார வளர்ச்சி அலுவலர் மணிமாறன் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பத்தூர் அ. மகாதேவன்

ஜூலை 29 (2013)



சிவகங்கை மாவட்டத்தில் கழகத்தின் வளர்ச்சிக்காக அயராது பணியாற்றியவர். ஒன்றுபட்ட இராமநாதபுரம் மாவட்டத்தில் அனைத்து கிராமங்களுக்கும் சென்று கழகத்தினை வளர்த்தவர்.

ஒன்றியச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.

“பிராமண சமுதாயத்தைச் சேர்ந்த இவர், அந்தகாலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு தீவிரமாக பணியாற்றியவர்” என தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்..

தலைமைக் கழகம்
தி.மு.க.